சென்னை கிழக்கு மாவட்டக் கழக கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் – துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48–வது பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் தெற்கு பகுதி இளைஞர் அணி தோழர் ஆர்.ராஜசேகர் தயாரித்த வாழ்த்து பாடல்களை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டார்.

ரூ.1380 கோடியிலான 79 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்நாட்டு விழாவிற்கு வருகை தரும்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, நவ. 29-

“ரூ.1380 கோடி ரூபாய்க்கான 79 புதிய திட்டப்பணிகளின் அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பளிக்க சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் முடிவு செய்துள்ளது என்று மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 28.11.2024 வியாழக்கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள MKT மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம் கவி, ஜோசப்சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, எம். விஜயகுமார், கே.எஸ்.எம். நாதன், சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பரிதிஇளம்சுருதி, எம்.பி.எம்.ஷேக் அப்துல்லா, ஆர்.வரதன், மாவட்ட நிர்வாகி கள்: தேவஜவஹர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத் பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, கூ.பி. ஜெயின், வே.வாசு, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், MTR நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, தேர்தல் பொறுப்பாளர்கள்: பி.முனியாண்டி, P.M.யாழினி, இரா.நரேந்திரன், ஓ.ஏ.நாகலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீல கண்டன், ஏ.பி.பூர்ணிமா, பி.ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: J.பாலமுருகன், S. தனசேகர், க.வினோத், ஜி. ஜே.பிரபு, வானவில்விஜய், L.P.F. மோகன், எம்.பிரோஸ்கான், P.விஜயகுமார், எம். விநாயகம், து.ஆயிரம், துரைக்கண்ணன், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி. பி.பிரதீப்குமார், ஆர்.எஸ். சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, மற்றும் வட்டகழகச்செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

குலக்கல்வி திட்டத்தை எதிர்த்து வென்ற தலைவர்களின் கொள்கை வாரிசுகளான நாங்கள் குலத்தொழில் முறையை ஊக்குவிக்கும் திட்டங்கள் எந்த வடிவில் வந்தாலும் ஆதரிக்க மாட்டோம் என்று சொல்லி சாதிய அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தற்போதைய வடிவில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது. அதற்கு பதிலாக சமூகநீதி அடிப்படையிலான - சாதிய பாகுபாடற்ற அனைத்து கைவினைக் கலைஞர்களுக்கு முழு ஆதரவளிக்கும் விரிவான திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கும் என்றுரைத்த கழகத்தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் பாராட்டி வணங்கி தீர்மானம் நிறைவேற்றியது.

கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளான மனிதநேய உதயநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் திட்டமிடப்பட்டு அறிவிக்கப்பட்ட 25 நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் நடைபெற்ற நலத்திட்டம் வழங்கும் விழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று இவ்விழாவில் கழக மூத்த முன்னோடிகளுக்கு 100 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்கினார். மேலும் 250 பள்ளி மாணவ-மாணவியருக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.13 ஆயிரம் மதிப்புள்ள விளையாட்டு உபகரணங்கள், 50 சுய உதவி குழுக்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் பணம் மற்றும் புத்தாடைகள், 100 திருநங்கை களுக்கு தலா ரூ.10 ஆயிரம், மாற்றுத்திறனாளிகள் 10 பேருக்கு மூன்று சக்கர வாகனம் என 1335 பேருக்கு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்புரையாற்றியதற்கு இக்கூட்டம் மனமார்ந் நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

சென்னை கிழக்கு மாவட்டம் - துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் பெருநகர சென்னை காவல் ஆகிய துறைகளின் சார்பில் ரூ.1380 கோடி மதிப்பீட்டில் 79 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவிற்கும், முடிவுற்ற 29 பணிகளுக்கான திறப்பு விழாவிற்கும் வருகை தரும் கழகத்தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பென்னாகரத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த

சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் - ரூ.3 இலட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 29-

தருமபுரி மாவட்டம், பென்னாகரம், அலகட்டு கிராமத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி உள்வட்டம், வட்டு வனஅள்ளி வருவாய் கிராமத்திற்குட்பட்ட, அலகட்டு மலை கிராமத்தைச் சேர்ந்த ருத்ரப்பா – திருமதி.சிவலிங்கி தம்பதியரின் மகள் கஸ்தூரி (வயது 14) என்பவர் நேற்று (28.11.2024) பிற்பகல் அவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் கீரை பறித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக விஷப்பாம்பு கடித்ததில், உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தினேஷ் மாணிக்கம் தலைமை! நந்தனம் கி.மதி முன்னிலையில்

துணை முதல்வர் பிறந்தநாள்! பள்ளி மாணவர்களுக்கு சமபந்தி விருந்து!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.ஜோயல் வழங்குகின்றனர்!

சென்னை, நவ. 30-

கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு சமபந்தி விருந்து இன்று (29-11-2024 - வெள்ளிக்கிழமை) மதியம் 12 மணியளவில் பக்ஸ் சாலை , சென்னாபூரி அண்ணா சமாஜம் பள்ளியில் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் தலைமை ஏற்கிறார்.

நிகழ்ச்சிக்கு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி முன்னிலை வகிக்கிறார்.

ராஜா அன்பழகன் வரவேற்புரையாற்றுகிறார்.

சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணை செயலாளர் துத்துகுடி எஸ்.அஜோயல் ஆகியோர் பள்ளி மாணவர்களுக்கு சமபந்தி விருந்து வழங்குகின்றனர்.

பகுதி துணை அமைப்பாளர்கள்,வட்ட அமைப்பாளர்கள்,வட்ட துணை அமைப்பாளர்கள் இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

ஃபெங்கல் புயல் வலுவிழந்தது !

நாளை மாமல்லபுரம் - காரைக்காலிடையே கரையை கடக்கும்! வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை, நவ.29-

தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ந்து நகராமல் ஒரே இடத்தில் மையம் கொண்டுள்ளது. இதனால் புயலாக வலுப்பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மிகவும் மெதுவாக நகர்ந்து வந்தது. நேற்று அதிகாலை 2 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது நகராமல் ஒரே இடத்தில் மையம் கொண்டிருந்தது. இதனால் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இலங்கை திரிகோணமலைக்கு கிழக்கு வடகிழக்கே 110 கிலோ மீட்டர் தொலைவிலும், தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கு திசையில் 310 கிலோமீட்டர் தொலைவிலும், புதுவைக்கு தென்கிழக்கு 410 கிலோமீட்டர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கு தென்கிழக்கு 480 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இலங்கைக் கரையோரப் பகுதியில் வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து புயலாக வலுப்பெறும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. ஃபெங்கல் எனப் பெயரிடப்பட உள்ள இந்த புயல் தொடர்ந்து வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வலுவிழந்து வட தமிழ்நாடு புதுவை கடற்கரை இடையே காரைக்கால் மற்றும் மாமல்லபுரம் இடையே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக 30ஆம் தேதி கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தென்மேற்கு வங்க கடலில் இன்று காலை வரை 65 முதல் 75 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148 வட்ட கழக சார்பில் தமிழக துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையிலும் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் முன்னிலையிலும் பகுதி அமைப்புசாரா ஓட்டுநர் அணி சி. ராஜேந்திரன் ஏற்பாட்டில் 1000 பேருக்கு பிரியாணி வழங்கப்பட்டது. பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் வ.வெங்கடேசன் ஏற்பாட்டில் 300 பெண்களுக்கு புத்தாடை வழங்கப்பட்டது இதில் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் பொதுக் கூட்டம் சைதை கிழக்கு பகுதி 168வது வட்டக் கழகம் சார்பில் வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன் தலைமையில் ஈக்காட்டுத்தாங்கல் காந்தி நகர் மெயின் ரோட்டில் நடைபெற்றது பொதுக் கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு உரையாற்றினார் மேலும் கூட்டத்தில் கழக சொற்பொழிவாளர்கள் கரூர் முரளி இளம் சொற்பொழிவாளர் ச.ஜோதி பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தொகுதி பார்வையாளர் பரிதி இளம் சுருதி எம்.சி. தா.மோகன்குமார் எம்.சி க.ஒப்பிலாமணி கோ.தணசேகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர் கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன் ஆர்.அருணகிரி மு.பாக்கியலட்சுமி நேரு நகர் எஸ்.பாட்சா ஆர்.டி.மூர்த்தி டி.வி.நரசிம்மன் இரா.பால்ராஜ் கே . எஸ்.பாபு எஸ்.மோகன்தாஸ் ஆர் . செல்வம் ஈ.தணசேகரன் என் . சுதாகர் கொடி.பாலா மு.பாபு எம் .ராஜி எஸ்.அறிவானந்தம் எஸ்.தேவி கு.வீராசாமி கே.ராஜாராம் ஆர்.குப்பன் கு . மோகன் ம..ராஜ்குமார் மு.செந்தில்வேல் எஸ்.குப்புசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் முன்னிட்டு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி, 35 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.உமாபதி முன்னிலையில் முத்தமிழ் நகர், 5 வது பிளாக்கில் வசிக்கும் பாஸ்கர் என்பவருக்கு நான்கு சக்கர இஸ்திரி வண்டி மற்றும் அயன் பாக்ஸ் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்டப் பிரதிநிதி இ.சையது அலிகான் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. உடன் வட்ட அவைத் தலைவர் பி.செல்வராஜ், பகுதிப் பிரதிநிதி பி.செல்வமணி, எல்.பிரதீப்குமார், மருத்துவர் அணி துணை அமைப்பாளர் அ.ஷேக் அப்துல்லா, ஆசிரியர் எல்.அய்யனார், ஏ.சாதிக் பாஷா, ஏ.இக்பால் அகமது, ஏ.எச்.அப்துல் நசீர், ஏ.ஜாகீர்உசேன், எஸ்.சாதிக், அன்பழகன், எஸ்.என்.ஆனந்த், ஒய்.காஜா மொய்தீன், டி.ஐயப்பன், வி.தினேஷ்குமார், என்.ராகுல், பி.வசந்த், பி.பிரவீன், ஏ.அப்துல்ஆபிஸ், ஏ.அப்துல் இம்ரான், அசிஸ், எஸ்.கவிதா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.